பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 26 வியாழக்கிழமை 10.07.2025 கதிர் 243

## இனி இது ரகசியம் அல்ல!

இந்த ஆண்டு தொடக்கத்தில், இது ஒரு தேர்தல் ஆண்டு என்றும், இந்த ஆண்டு இறுதிக்குள், உள்ளாட்சித் தேர்தல்கள் மட்டுமல்ல, மாகாண சபைத் தேர்தல்களும் ☞ 2

## பிள்ளையானுடன் எமக்கு எந்த ‘டீலுமே’ கிடையாது

### பிரதி அமைச்சர் மஹிந்த தெரிவிப்பு

பிள்ளையானுடன் ஆளும்தரப்புக்கு எந்த டீலும் கிடையாது. அவ்வாறு டீல் இருந்திருந்தால் இனிய பாரதி கைதாகியிருப்பரா? மக்களுடன் மட்டுமே எமக்கு டீல் உள்ளது. உயிர்த்தஞாயிறு குண்டுத்தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவோம் என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்தஜயசிங்க தெரிவித்தார். ☞ 2

# செம்மணி, ஈஸ்டர் தாக்குதல் இரண்டுக்கும் உடனடிச் சர்வதேச விசாரணை வேண்டும்

### சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

செம்மணி மற்றும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் போன்றவற்றுக்கு சர்வதேச விசாரணை உடனடியாக நடத்தப்படவேண்டும் இல்லாவிடின் இதற்கான நீதி கிடைக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒத்திவைப்புவேளை பிரேரணையின்போதே இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தேன் அதில் சர்ச்சைக்குரிய விடையங்கள் நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் போது அவர்களின் நாடாளுமன்ற சிறப்புரிமைக்கும் அவர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் வழங்கவேண்டும்.

செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் நீதி மறுக்கப்பட்டது என்பது நல்லிணக்கத்திற்கு பாதகமான ஒரு விடயம். பொறுப்புக்கூறல் என்பது நல்லிணக்கம் உருவாக முக்கிய விடயமாக உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 300 இற்கும் அதிகமானோர் கொல்லப் பட்டுள்ளனர். 1998/99 காலப்பகுதியில் சோமரட்ன ராஜபக்ஷ ☞ 2

# இலங்கை மீதான வரியை 30 சதவீதமாக்கியது அமெ.

### 14 சதவீதம் மட்டுமே குறைப்பு

**இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதிசெய்யப்படும்பொருட்களுக்கான வரியை 30 வீதமாக நிர்ணயித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார். முதலில் விதிக்கப்பட்ட விதியிலிருந்து 14 சதவீதம் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது.**

**இந்த வரி விதிப்பு, இலங்கையின் ஏற்றுமதித்துறையில் ஒருபெரியதாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.**

**முன்னதாக இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 12.2 வீத வரி விதித்திருந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறையாக டொனால்ட் டிரம்ப் தெரிவானதன் பின்னர் 44 வீதமாக அறிவித்திருந்தார்.**

**இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரியானது எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## ட்ரம்ப் அனுதாபப்பட்டாலன்றி இலங்கையால் எதுவும் முடியாது

### ஆளும்தரப்புக்கு நாமல் சாட்டையடி

ஜனாதிபதியால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்புக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கான பதில் கடிதம் கிடைக்கும் வரை காத்திருக்கின்றோம். ட்ரம்ப் இலங்கை மீது அனுதாபப்பட்டுத் தனது முடிவை ☞ 6

## பகிடிவதை குறித்து முறையிட அவசர தொலைபேசி அறிமுகம்

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை தடுக்க பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவழிகாட்டுதல்கள் சிலவற்றை முன்வைத்துள்ளது.

அதன்படி, பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு அளிக்க 24 மணிநேர அவசர தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

பகிடிவதையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் இந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடு அளிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் மற்றும் விடுதி வளாகங்களுக்குள் உள்ள ☞ 2

### செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில்

## சர்வதேச விசாரணை இன்றி நீதியை கண்டறிய முடியாது

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

செம்மணி மனிதப்புதைகுழிவிடயத்தில் சர்வதேச விசாரணை இன்றி நீதியைக் கண்டறிய முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க கூறும்போது, இது ☞ 2

## குற்றப்பத்திர அலுவலகம் விரைவில்

### நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

குற்றப்பத்திர அலுவலகம் வெகுவிரைவில் உருவாக்கப்படும். சட்டமா அதிபர் திணைக்களத்துடன் எவ்வித முரண்பாடுகளும் எமக்கு கிடையாது. சட்டமா அதிபருடன் இணக்கமாகவே செயற்படுகிறோம். பிள்ளையானுக்குப் பிணை பெற்றுக்கொடுக்க சட்டமா அதிபர் முயற்சிக்கவில்லை என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று) நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில்தான் உயிர்த்த ஞாயிறு ☞ 6

## அமைச்சர் சந்திரசேகரின் சர்ச்சைக் கருத்தால் நாடாளுமன்றத்தில் நேற்று வெடித்தது குழப்பம்

தமிழ் மொழியில் பேசுவதால் எள்ளி நகையாடி எதிர்க்கட்சியினர் தமிழை கொச்சைப்படுத்துவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் கூறியதால் சபையில் ஆளும், எதிர்க்கட்சியினர் இடையே கடும் சர்ச்சை ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, நாட்டில் 2015 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் மீன அறுவடை தொடர்பிலும், ☞ 2

## சிறுமியின் ஆடை, செருப்பு என்பவற்றுடன் மேலும் ஆறு எலும்புக்கூடுகள் அடையாளம்

### செம்மணியில் நேற்றுவரை மொத்த எண்ணிக்கை 63

யாழ்ப்பாணம் செம்மணி – சித்துபாத்தி மனித புதைகுழியிலிருந்து இதுவரை 63 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு அதில் 54 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்ட அகழ்வுப்பணியின் 14 ஆவது









நாளான நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்தராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. இன்றும் அகழ்வுப் பணிகள் தொடர்ந்து இடம்பெறும். அதன் பின்னர் சில நாள்கள் ஓய்வு வழங்கப்பட்டு மீண்டும் பணிகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே ☞ 6

## அரச சேவைகளை தாய் மொழியில் பெறக்கூடிய கொள்கைகள் வேண்டும்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

'வளமானநாடு-அழகானவாழ்க்கை' எனும் எமது தேர்தல் அறிக்கைக்கு அமைய, சகல குடிமக்களுக்கும் தேவைப்படுகின்ற சேவைகளைத் தமது தாய்மொழி மற்றும், சைகை மொழி மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நாட்டின் தேசிய கொள்கை செயல்படுத்தப்படவேண்டும் என பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

நடத்தப்படும் என்றும் என்பிபி ஆளும்தரப்பு நாட்டிற்குத் தெரிவித்தது. இருப்பினும், தற்போது என்னிடம் உள்ள தகவல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டாலும், இந்த ஆண்டு இறுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என்பதில் ஆளும்தரப்பு உறுதியான முடிவோடு உள்ளதாகத் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் குறித்து சிந்திக்கலாம் என்பதே இப்போதைக்கு ஆளும்தரப்பின் நிலைப்பாடு. அதற்கான அரசியல் நிகழ்ச்சி நிரல் தற்போது ஆளும்தரப்பால் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்க என்பிபி ஆளும்தரப்பு முடிவெடுத்ததற்குக் காரணம், உள்ளாட்சித் தேர்தல்களில் அவர்களின் வாக்குகளில் ஏற்பட்ட சரிவுதான். உள்ளாட்சித் தேர்தலில் 2.3 மில்லியன் வாக்குகள் சரிந்தன, அது மட்டுமல்ல, வடக்கு கிழக்கில் தமக்கு தமிழ் மக்களின் ஆதரவு இருப்பதாக அது தெரிவித்து வந்த நிலையில், அங்கும் தமிழ் அரசுக் கட்சியிடம் தோல்வியடைந்தது. மாகாண சபைத் தேர்தலையும் நடத்தினால், இந்த நிலை மிகவும் மோசமாகும் என்பதே ஆளும்தரப்பில் உள்ள முக்கியமான பலரினதும் கருத்தாக இருக்கின்றது. தமக்கான மக்கள் ஆதரவில் ஏற்பட்ட சரிவு குறித்து என்பிபி ஏற்கனவே ஒரு நீண்ட பகுப்பாய்வு நடத்தியுள்ளது. அதன்படி, இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டால், தற்போதைய வாக்குப் பங்கு இன்னும் தீவிரமாக சரிந்துவிடும் அபாயம் உள்ளதாக அந்த ஆய்வு முடிவுகள் எச்சரித்திருப்பதும் ஆளும்தரப்பு மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கான மற்றொரு காரணம்.

தற்பேதைய சூழ்நிலையில், மாகாண சபைத் தேர்தல் நடந்தால் திசைகாட்டியால் தனியாக எந்தவொரு மாகாண சபையையும் கைப்பற்றமுடியாது என்றும், மாகாண சபைகளில் அதிகாரத்தை நிலைநாட்ட ஆளும்தரப்பு நிச்சயமாக மற்றக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கவேண்டும் என்றும் ஆளும்தரப்புக் கருதுகிறது. அது மத்தியில் தமது ஆளும்தரப்பு மீதிருக்கும் மக்களின் பார்வையையே மாற்றிவிடும் என்றும் அது கருதுகின்றது.

உள்ளாட்சி சபைகளில் அதிகாரத்தைப் பிடிப்பதற்குக் குறிப்பாக வடக்கு கிழக்கில் சில சபைகளையாவது தமது அதிகாரத்தின் கீழும் வைத்திருப்பதற்கு மற்றைய கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டியிருந்தது. அதுவரையில் தம்மைத் தவிர மற்றைய எல்லாக் கட்சிகளும் அரசியல்வாதிகளும் திருடர்கள், ஊழல் பேர்வழிகள் என்று முழங்கிவந்தவர்கள் அதே கட்சிகளுடன் சேர்ந்தே சில இடங்களில் அதிகாரத்தைப் பிடிக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். இது மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாக இ-ருப்பதால், மாகாண சபைகளிலும் அந்த நிலையை மலிமா (திசைகாட்டி) ஆளும்தரப்பு விரும்பவில்லை. .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் அதிகாரத்துக்காகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சம்பவம் என்று கூறியுள்ளார். ராஜபக்சக்கள் தோல்வியடைந்திருந்த காலத்தில் ராஜபக்சக்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக தேசிய பாதுகாப்பைப் பலமிழக்கச்செய்து இவ்வாறான சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

சுதந்திர காலத்தில் இருந்து 78 வருடங்களாக அரசியல் அதிகாரங்களுடனேயே அரசியல் நிறுவனங்கள் இருந்துள்ளன. சுயாதீனமாக இயங்கவில்லை. அரசியல் தலையீடுகளுடையே நடந்துள்ளன. இதுவே உண்மையாக காரணங்கள் இந்த விடயங்களுக்கு.

இந்த அரசும் இதனைப் புரிந்துகொள்ளவேண்டும். இங்கு உள்ளக விசாரணைகளின் நீதியை எதிர்பார்க்க முடியாது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களே விசாரிப்பது எப்படி நியாயமாக அமையும்? செம்மணி மனித புதைகுழி விடயத்தில் அரசு ஒன்றே குற்றவாளியாக இருக்கின்றது. இந்த ஆளும்தரப்பும் போருக்கு ஆதரவளித்துள்ளது.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே செம்மணி மனிதப் புதைகுழிகள் உருவாகியுள்ளன. அங்கே முதல் அகழ்வின்போது 15 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. கிருஷாந்திகுமாரசுவாமி கொலை வழக்கின் குற்றவாளியின் வாக்குமூலத்தில் 500 முதல் 600 வரையிலான உடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளார். ஆனால், அவற்றில் 15 எலும்புகூடுகளே அன்று மீட்கப்பட்டன.

ஆளும்தரப்பே செம்மணி மனிதப் புதைகுழியின் குற்றவாளித் தரப்பாக இருக்கின்றது. தற்போது அதற்கு அருகில் இன்னுமொரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கே குற்றமொன்று நடந்துள்ளது. அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு நீதியை நிலைநாட்டவேண்டும். சர்வதேச விசாரணைகள் இன்றி இதில் உண்மைகளைக் கண்டறியமுடியாது. இந்த ஆட்சியாளர்களும் போருக்கு ஆதரவளித்துள்ளனர் - என்றார்.

## பிள்ளையானுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவோம், சூத்திரதாரிகள் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின் போது மக்களுக்கு வாக்குறுதியளித்தோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் இருந்து ஒரு துளியளவேனும் விலக மாட்டோம். விசாரணைகளை துரிதமாக முடித்து சகல இலங்கையர்களுக்கும் நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவே முயற்சிக்கின்றோம்.

ஆனால் பல்வேறு காரணங்களால் இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் நாங்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்பதனை உறுதியாக கூறிக்கொள்கின்றோம்.

இதேவேளை இந்த விடயத்தில் தவறான கருத்துக்களை பரப்பவேண்டாம். இது மக்களின் அரசாங்கமே. பயங்கரவாத தடைச்சட்டத்தில் சிறையில் உள்ள பிள்ளையானுடன் ஆளும்தரப்பு டீல் வைத்திருப்பதாக குறிப்பிடுவதை முற்றாக நிராகரிக்கிறோம். பல குற்றங்களில் சந்தேக நபராக கருதப்படும் பிள்ளையானுடன் டீல் வைக்க எமக்கு எவ்வித அவசியமும் கிடையாது.

இவர்கள் குறிப்பிடுவதை போன்று பிள்ளையானுடன் நாங்கள் டீல் இருந்தால் அவருடன் இருந்த இனிய பாரதி கைது செய்யப்பட்டிருப்பாரா, அவ்வாறு எவருடனும் டீல் கிடையாது. மக்களுடனேயே டீல் உள்ளது. அந்த டீலை முறையாக செயற்படுத்துவோம் என்றார்.

## அரச சேவைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற 'மறுமலர்ச்சியின் எதிர்காலப் பாதை' எனும் தலைப்பில் நடத்தப்பட்ட, தேசிய மொழிகள் வாரத்தின் இறுதி நாள் விழாவில் பங்கேற்று உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

'மொழியை வளர்ப்போம் – இதயங்களை வெல்வோம்' எனும் தலைப்பில் ஜூலை மாதம் 01ஆம் திகதி ஆரம்பமான அரச மொழிகள் தினத்திலிருந்து, ஏழு தினங்கள் நடைபெற்ற அரச மொழி வாரத்தின் இறுதி விழா பிரதமரினதும், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணாயக்கார ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மொழிகள் வாரம் என்பது மொழிக் கொள்கையில் கவனம் செலுத்தி அதை அங்கீகரிக்கும் வாரம் மாத்திரமல்ல, அது மொழியின் அடையாளம், மரியாதை மற்றும் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அமைதியான சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் மொழியின் தீர்க்கமான பங்கினைப் பற்றி கவனம் செலுத்தப்பட்ட ஒரு வாரமும் ஆகும்.

நீதிமன்றம், பொலிஸ், கல்வி, அரச நிறுவனங்கள் மற்றும் அரச நிர்வாகம் போன்ற அத்தியாவசிய நிறுவனங்களில் தமது தாய்மொழி மூலம் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இல்லை என்பதை ஏதேனும் ஒரு இனத்தவர் உணர்வார்களாக இருப்பின், அது வெறுமனே சேவை வழங்கல் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல.

அத்தகைய சந்தர்ப்பங்களில், அந்த இனத்தவர் 'நாம் இந்த நாட்டுக்குச் சொந்தமானவர்கள் அல்ல, அந்நியர்களே' என்ற எண்ணம் இயல்பாகவே ஏற்படக்கூடும். ஆகையினால் மொழியைப் பயன்படுத்தும் போது சகல மக்களுக்கும் சம உரிமையும் மரியாதையும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆகையினால், சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களுக்கு மற்றவர்களின் மொழிகளைக் கற்கக்கூடிய பாடசாலைகள், நோயாளிகளுக்கு நமது நோய் பற்றி விவரங்களை தமக்கு மிகவும் நெருங்கிய உணர்வுபூர்வமான மொழியில் விளக்கக்கூடிய, தமக்குரிய சலுகைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வைத்தியசாலைகள், குடிமக்களுக்குப் புரிகின்ற மொழியில் நீதியை நிலைநாட்டும் நீதித்துறை ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். இவை ஒன்றும் சொகுசான வசதிகள் அல்ல.

நல்லிணக்கம் மிக்க ஒரு சமூகத்தில் செயற்பாட்டு ரீதியாகவே இருக்க வேண்டிய இயல்பான நிலைமைகளாகும். 2026ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நாட்டின் அனைத்து மொழிகளினதும் முக்கியத்துவத்தை பிள்ளைகளால் நன்கு உணரக்கூடிய விதத்திலும், மொழியை வெறுமனே ஒரு பாடம் என்பதற்கு அப்பால் சென்ற முக்கியத்துவத்துடன் கற்பிக்கும் வழிமுறைகளை உள்வாங்கப்பட்டிருப்பதின் நோக்கமும் அதுவே ஆகும் என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணாயக்கார,

'எமக்கிடையே பகிர்ந்து கொள்வதற்கு ஒரே விதமான கடந்த காலம் ஒன்று எமக்கு இல்லாவிட்டாலும், நாம் ஒன்றிணைந்து உருவாக்கிக் கொள்ள வேண்டிய எதிர்காலமொன்று இருக்கின்றது.

இந்த தேசிய மொழிகள் தினத்தில், நம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையான நல்லிணக்கத்தையும் உயிர்ப்புமிக்க ஒருமைப்பாட்டையும் கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்றார்.

தேசிய மொழிகள் வாரத்தின் நிறைவு விழாவில், அரச கரும மொழிகள் ஆணைக்குழுவினால் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பொன்மொழி உருவாக்கப் போட்டியின் வெற்றியாளர்களுக்கும், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தேசிய மொழித் தேர்ச்சித் தேர்வுகளில் சித்தி பெற்றவர்களுக்கும் பிரதமரால் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர், பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர், தேசிய ஒருங்கிணைப்பு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ஆயிஷா ஜினதாஸ உள்ளிட்ட அரச மற்றும் இராஜதந்திர அதிகாரிகள், மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## செம்மணி,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும் நபர் மொழிந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணி பிரதேசத்தில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 15 மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளது. இவ் எச்சங்கள் ஸ்கொட்லாந்தில் கிளஸ்கோவில் உள்ளதாக அறிகின்றோம். ஏன் இவற்றை இலங்கை ஆளும்தரப்பு ஆய்வு செய்யவில்லை? ம்ஹிபு பரிசோதனை இலங்கை ஆளும்தரப்புக்கு மேற்கொள்ள வசதிகள் இல்லாத நிலையில் ஏன் இலங்கை ஆளும்தரப்பு சர்வதேசத்தின் உதவியை நாட தயங்குகின்றது?

ஆளும்தரப்பு செய்ய குற்றங்களை ஆளும்தரப்பு விசாரிப்பதில் சிக்கல்கள் உள் ளன என அரசுத் தலைவர் கூறியுள்ளார். இதானாலேயே நாங்கள் சர்வதேச விசார ணை ஒன்றினை எதிர்பார்க்கின்றோம். ஆளும்தரப்பு ஊழல் ஒழிப்பிற்கு விசேட அலுவலகம் ஒன்றினை உருவாக்க யோசிப்பது போல் ஏன் மனித உரிமை மீறல் களை விசாரிக்க அலுவலகம் அமைக்க வில்லை? ஆரையம்பதியில் கொல்லப்பட்ட விஜிதா, மட்டக்களப்பில் கொல்லப்பட்ட ரிபாயா, பிறேமினி, மனித புதைகுழி உள்ள கொக்குத்தொடுவாய், மாத்தளை, செம்மணி, இன்னும் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்படாத பிள்ளையானின் தீவுச்சேனை ஆகியவற்றின் மீது ஏன் இன்னும் விசாரணை மேற்கொள்ளவில்லை?

சட்டத்தில் இணையவழி (Online) மூலமாக வாக்குமூலம் பதிவு செய்வதற்கு இயலுமாக இருப்பினும் தற்போது பிள்ளையானுக்கு எதிராக சாட்சி அளிக்க தயாராக உள்ள அசாத் மௌலானாவின் வாக்குமூலமானது பதிவு செய்யப்படவில்லை. அசாத் மௌலானா தனது வாக்குமூலத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய போதிலும் அவ் அறிக்கையினை இலங்கை ஆளும்தரப்பு இன்றளவிலும் கேட்டுப் பெறவில்லை.

2004ம் ஆண்டிலிருந்து இந் நாட்டில் இஸ்லாமிய அடிப்படை வாதத்தினை உருவாக்கியது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே. கலில் (ஓட்டமாவடி) மற்றும் பாயிஸ் (காத்தான்குடி) எனும் அழைக்கப்படும் இருவர் தற்போது வரை இயங்கிக் கொண்டிருக்கின்றனர். கலில் என்பவர் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவின் கொலை வழக்கில் பிள்ளையானுடன் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட ஒருவர். இலங்கை ஆளும்தரப்பு இன்று வரை இவர்களிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை.

நியாஸ் எனும் ஒருவர் சாய்ந்தமருதில் சுட்டுக்கொல்லப்பட்டவர். இவர் நிந்தவூர் பாதுகாப்பு இல்லத்தில் (Safe House) இருந்தார் என்று இராணுவ புலனாய்வுத் துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சென்றபோதும் அவரைப் பிடிக்கமுடியவில்லை. ஆனால் அவர் முக்கிய சாட்சியாக கருதப்படக்கூடிய ஒருவர். ஆனால் இச் சாட்சியை மூடி மறைத்துள்ளனர்.

சாரா எனப்படும் புலஸ்தினியினுடைய 3ஆவது மரபணு (DNA) அறிக்கையின் பிற்பாடே அவர் இறந்து விட்டார் என மொழியப்பட்டது. இரு தடவைகளும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் அவரை ஏன் இனங்காண முடியவில்லை? இவருடைய தேசிய அடையாள அட்டை அம்பாறை நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சாராவினுடைய பொருட்கள் அனைத்தும் தீக்கிரையாகிவிட்டன என்றால் எவ்வாறு தேசிய அடையாள அட்டை மாத்திரம் கைப்பற்றப்பட்டது?

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வைத்துக்கொண்டு அரசியல் இலாபம் தேட நினைக்கும் கட்சிகள் உள்ளன. 'மினுவாங்கொட போன்ற இடங்களில் இஸ்லாமியர்களின் கடைகளை எரித்ததற்கு பின்புலத்தில் சரத்வீரசேகர என்பவரே உள்ளார்.' என மைத்திரிபால சிறிசேன அவர்களின் குரல் பதிவும் உள்ளது. ஆனால் ஏன் இதுவரை காலமும் சரத் வீரசேகரவிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை?

றொஹான் குணரட்ன என அழைக்கப்படும் விரிவுரையாளர் என்பவர் சிங்கப்பூரில் உள்ள தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் Security Defence பற்றிய விரிவுரையாளர். ஐஎஸ் தீவிரவாத அமைப்பே இக்குற்றங்களுக்கு காரணம் என இவர் இரு மாதங்களுக்கு முன்பே கூறியுள்ளார். அரசாங்க அமைச்சர் பிள்ளையானே இக் குற்றங்களுக்கு பின்னணி சூத்திரதாரி எனக் கூறுகின்றார். றொஹான் குணரட்ன என்பவர் பொய்யான வாக்குறுதிகளை மொழிதமைக்காக கனடாவில் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஆகவே இது தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

2008ம் ஆண்டு காலப்பகுதியில் ஏறாவூர் பகுதியை சேர்ந்த முஹமட் ரசாக் என்பவரது துப்பாக்கி தொலைந்தது. இத் துப்பாக்கி நுவரெலியாவில் உள்ள ரசாக் என்பவரிடம் இருப்பதாக அவர் கைது செய்யப்பட்டார். இவர் (Islamic Centre) எனும் அமைப்பில் உள்ளார். இத் துப்பாக்கி சபீக் எனப்படுபவரிடமிருந்து ரசாக் என்பவருக்கு விற்கப்பட்டதாகவே தகவல். இத் துப்பாக்கியினையே ரில்வான் சாய்ந்தமருதில் ஏற்பட்ட குண்டு வெடிப்பின் போது வைத்திருந்தவர் என தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஏன் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்காலப் பகுதியில் மீன் ஏற்றுமதி மூலம் ஈட்டிய வருமானம் தொடர்பிலும் எழுப்பிய கேள்விகளுக்கு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தமிழ் மொழியில் நீண்ட பதிலை வழங்கினார்.

இடையில் எழுந்த ஹெக்டர் அப்புஹாமி, அதனை நீங்கள் சபைக்கு ஆற்றுப்படுத்துங்கள். நாங்கள் கேட்காத விடயங்களையும் நீங்கள் கூறிக்கொண்டு போகின்றீர்கள். நீங்கள் கூறியதில் இருந்து இடைக் கேள்விகளையும் கேட்க முடியாதுள்ளது என்றார். உடனே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிரித்தனர்.

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சர்வதேச விசாரணை - கோரிக்கையா? செயல் திட்டமா?

**செம்மணியில்தற்போதுதோண்டப்படும்மனிதப்புதைகுழி, இலங்கையின் குருதிக்கறை காலத்தினை மீண்டும் மையக்கருவியாக்கியுள்ளது. மூன்றாவது தொகுதியில் 30க்கும்மேற்பட்டஎலும்புக்கூடுகள்கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலையில்,இது25வருடங்களுக்குமுன்னர்கண்டுபிடிக்கப்பட்ட செம்மணிப் புதைகுழி வழக்குடன் தொடர்புடையதா என்ற கேள்வி முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்நிலையில், தமிழ்க் கட்சிகள் 'சர்வதேச விசாரணை வேண்டும்' என்ற கோஷத்தை மீண்டும் எழுப்பியுள்ளனர். ஆனால், போர்க் குற்றங்கள் கடந்த 15 வருடங்களாக தொடர்ந்து வலியுறுத்தியும் அவர்கள் விரும்பும் அத்தகைய சர்வதேச குற்ற விசாரணை ஒன்று நடத்தப்படவேயில்லை.**

**இப்போது எழும் முக்கியமான கேள்வி, செம்மணி விடயத்தில் சர்வதேச விசாரணையை எப்படிக் கொண்டு வருவது? அந்த வழிமுறைகள் என்ன? அந்த இலக்கை அடைவதற்கான கட்டமைப்புகள், முயற்சிகள், திட்டங்கள் என்ன? இதைப் பற்றிய தெளிவும், பொறுப்பும் தமிழ்க் கட்சிகளிடம் இருக்க வேண்டிய தருணம் இது.**

**ஒரு விடயம் தெளிவாக இருக்கவேண்டும். சர்வதேச விசாரணை என்பது வெறும் கோரிக்கையினால் வருவதல்ல. அதற்குப் பல கட்ட நடவடிக்கைகள் தேவை. உள்நாட்டு விசாரணை முயற்சிகள் தோல்வியடைந்தமை, நீதிபதி அறிக்கைகள், வலுவிற்ற ஆதாரங்கள், உயிரிழந்த உறவினர்களின் சாட்சிகள், அனைத்தும் தொகுக்கப்பட்டு சர்வதேச வாயிலாக முன்வைக்கப்பட வேண்டியுள்ளது.**

**ஆனால், கடந்த 25 வருடங்களாக செம்மணிப் புதைகுழி வழக்கை தமிழ்க் கட்சிகள் முற்றிலுமாக மறந்துபோய்த்தான் இருந்தன. அதனை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்துமாறு கோரும் ஒரு சட்டவழிப் போராட்டமாக தமிழ்க் கட்சிகள் அதனை முன்னெடுத்ததாகக் காட்டிய ஆதாரங்கள் இல்லை. இன்று செம்மணியில் மீண்டும் மனித எலும்புக்கூடுகள் தோன்றவில்லை என்றால், தமிழ்க் கட்சிகளில் ஒன்றுகூட செம்மணியைப் பற்றிப் பேசியிருக்கமாட்டா, அதனை சர்வதுச விசாரணைக்கு உட்படுத்துமாறு கூறியிருக்கமாட்டா என்பது சர்வ நிச்சயம்.**

**அப்படிப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுப்கொடுப்பதில் தங்கள் கையாலாகத் தனத்தை மறைக்க சர்வதேச விசாரணை என்ற ஒற்றைக் கோசத்தை மட்டும் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் உச்சரிப்பது தீர்வாக மாறாது. அத்தகைய கோரிக்கையை செயல்வடிவமாக்க தமிழ்க் கட்சிகள் தாங்கள் வைத்துள்ள செயல் திட்டங்களை மக்களிடம் வெளிப்படையாகக் கூறவேண்டிய தருணம் இது. உண்மையில் அவர்கள் சர்வதேச விசாரணையை விரும்புகின்றார்களா? அல்லது அதன் பெயரில் மக்கள் உணர்வூட்டி அரசியல் இலபமடைய விரும்புகிறார்களா என்கிற கேள்வியை அவர்கள் முன்வைக்கவேண்டியிருக்கின்றது.**

**சர்வதேசவிசாரணையைவிரும்புகிறோம்என்றால், அந்த கோரிக்கையை நடைமுறைப்படுத்தும் வழிகளை தமிழ்க் கட்சிகள் வகுத்துக் கூறவேண்டும். ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் வழி எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களில் காணப்படும் தடைகள் என்ன? அவற்றைக் கடப்பதற்கான வழிகள் என்ன? இலங்கையில் உள்ள அரசியல் சூழ்நிலை எவ்வாறு அதற்கு பக்கபலமாக மாற்றப்படலாம்? என்பவற்றை அவை தெளிவுபடுத்தவேண்டும். இது விடயத்தில் பொதுமக்கள், வழக்கறிஞர்கள், சுயாதீன விசாரணை அமைப்புகள் என்று அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டிய தருணமாக இது காணப்படுகின்றது.**

**'சர்வதேச விசாரணைவேண்டும்' என முழங்குவது மட்டுமல்லாது, அதன் நோக்கத்தையும் வழிமுறையையும் தெளிவுபடுத்துங்கள். இல்லையெனில், இது வெறும் அரசியல் நிகழ்வாக மட்டுமே கருதப்படும் அபாயம் நிலவுகிறது.**

# கத்தோலிக்க மக்களை ஏமாற்றிவிட்டது ஆளும்தரப்பு அந்த மக்களுக்கு நீதி கிட்ட நடவடிக்கைகள் தேவை

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

*உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்கமக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு, அதுதொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அந்த மக்களை ஏமாற்றி இருக்கிறது. அதனால் ஆளும்தரப்பு அந்த மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான சபை ஒத்துவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:*

*2019 ஜனாதிபதி தேர்தலுக்கு உயிர்த்தஞாயிறுதாக்குதல்சம்பவத்தை பயன்படுத்திக்கொண்டு அன்று கோட்டாபயராஜபக்ஷஜனாதிபதியாக தெரிவானார்.*

*அதேபோன்று 2024இல் தேசிய மக்கள் சக்தி, இற்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில்பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்காடுப்பதாக வாக்குறுதியளித்து அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி பதவிக்கு வந்தார்.*

*அதனால் இந்த தாக்குதல் காரமாக அரசியல் கட்சியாக எமக்கே பாதிப்பு ஏற்பட்டது. அதேபோன்று இந்த தாக்குதலில் பிரதானமாக பாதிக்கப்பட்டது கத்தோலிக்க மக்கள். அடுத்தபடியாக முஸ்லிம் மக்களாகும். அன்று ஏற்பட்ட அழுத்தம் காரணமாக எமது அரசாங்கத்தில் இருந்து முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகினார்கள்.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்காடுப்பதாகவும்தாக்குதலுக்கு சம்பந்தப்பட்டவர்களை சட்டத்துக்கு முன் கொண்டுவருவதாகவும் தெரிவித்து ஆட்சிக்கு வந்த, இந்த ஆளும்தரப்பு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

*குறைந்தபட்சம் இந்திய வெளிவிவாக அமைச்சர் நாட்டுக்கு வந்தபோது, இந்தியாவுக்கு தப்பிச்சென்ற சாரா ஜெஸ்மின் தொடர்பில் கேட்டார்களா? ஆனால் ஆளும்தரப்பு இது தொடர்பில் மிகவும் மெத்தன போக்கையே கடைப்பிடித்து வருகிறது. அதனால் ஆளும்தரப்பு இந்த விடயத்தை விரைவுபடுத்துமாறு தெரிவிக்கிறோம்.*

*மேலும் சஹ்ரானுக்கு மேல் ஒரு தலைவர் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார். அப்படியானால் அவர் யார் என்பதை வெளிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது.*

*அதேபோன்று இந்த சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை குழுவுக்கு சாட்சி வழங்க சென்ற அதிகாரி, சாட்சி தெரிவிப்பதற்கு பதிலாக,பிரதான சூத்திரதாரி யார் என்பதை துண்டு ஒன்றில் எழுதி கொடுத்தார்.*

*அது யார் என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும்.தற்போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்தசம்பவம்தொடர்பில்தெரிவிக்கும் அனைத்து விடயங்களும்எமது அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வெளிவந்த விடயங்களாகும்.*

*புதிய விடயமாக பிள்ளையானை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள். அதனைத் தவிர வேறு எந்த விடயத்தையும் வெளிப்படுத்தவில்லை.*

*சிறிய சஹ்ரானின் ஆலாசகரை கண்டுபிடித்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் உண்மை நிலையை தெரிந்துகொள்ளலாம் என அநுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது தெரிவித்தார்.*

*ஆனால் தமற்போது அவர் ஜனாதிபதி, சிறிய சஹ்ரான் யார் என்பது தொடர்பில் எப்.பி.ஐ. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் ஆளும்தரப்பு இந்த விடயங்களைவெளிப்படுத்தவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*அத்துடன் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எங்கே வெளிப்படுத்தினீர்களா? ஆளும்தரப்பு கத்தோலிக்க மக்களை ஏமாற்றியுள்ளது.*

*கர்தினால் உள்ளிட்ட கத்தோலிக்க மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது இருந்த நம்பிக்கை தற்போது இழந்து வருகிறது. கத்தோலிக்க மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு தற்போது அவர்களை ஏமாற்றி இருக்கிறது.*

*அதனால் ஆளும்தரப்பு அந்த மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.*

# சபாநாயகர் ஆளும்தரப்புக்கு மட்டும்தானா? ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றில் சீற்றம்

நாடாளுமன்றத்தில் 224 உறுப்பினர்களின் சபாநாயகரா நீங்கள் அல்லது 158 பேரின் சபாநாயகரா நீங்கள்? என்று சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நோக்கி கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, ஒழுக்கமாக செயற்படுமாறு அறிவுறுத்த முன்னர் அந்த அறிவுறுத்தலை வழுங்குபவர்கள் முதலில் ஒழுக்கமாக செயற்பட வேண்டும் என்றும் கடுமையாக சாடினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (9) நடைபெற்ற அமர்வின்போது பிரதமருடனான கேள்வி வேளையின்போது ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து கேள்வியெழுப்பிய ஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதற்கு பிரதமர் காலவகாசம் கோரினார். ஆனால், இதுவரையில் பதிலளிக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதில் பிரதமருக்கு ஏதேனும் பிரச்சினை உள்ளதா என்று வினவினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி இந்த கேள்விக்கு பதிலளிப்பதற்கு எனக்கு எவ்வித பிரச்சினையுமில்லை. இந்த கேள்விக்கு பதிலளிப்பதற்கு நான் இருந்தேன். இவர் ஏன் கலக்கமடைகிறார் என்பதை அறியவில்லை என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, பிரதமரிடம் கேள்வி கேட்கும் உறுப்பினருக்கு மேலதிக கேள்வி கேட்பதற்கு உரிமையுண்டு. முன்வைத்த கேள்விக்கு பிரதமர் பதிலளித்துக்கொண்டிருக்கும் போது பிறிதொருவர் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து கேள்வி கேட்கிறார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்காதீர்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 92(அ) பிரிவின் பிரகாரம் பிரதமருடனான கேள்வி வேளையின்போது நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி கேள்வி எழுப்ப முடியும் என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவர் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

மீண்டும் நிலையியற் கட்டளையின் ஏற்பாட்டை சுட்டிக்காட்டி உரையாற்றிய சமிந்த விஜேசிறி சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நோக்கி 'நீங்கள் 224 உறுப்பினர்களின் சபாநாயகரா அல்லது 158 பேரின் சபாநாயகரா' என்று கேள்வியெழுப்பி ஒழுக்காமாக செயற்படுமாறு எமக்கு ஆலோசனை வழுங்குபவர்கள் முதலில் ஒழுக்கமாக செயற்பட வேண்டும். 224 உறுப்பினர்களின் சபாநாயகராக செயற்படுங்கள் என்று கடுமையாக சாடினார்.

## வடக்கு தொடருந்து சேவையில் திருத்தம் யாழ். சேவை கல்கிஸை வரையும் நீடிப்பு

பொதுமக்களின் வேண்டுகோளின் பேரில் வடக்கு தொடருந்து மார்க்கத்தில் தொடருந்து இயக்க நேரங்கள் திருத்தப்பட்டுள்ளதாக இலங்கை தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் திருத்தங்கள் ஜூலை 7 முதல் தினமும் செயல்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், கடந்த சில வாரங்களாக கொழும்பு கோட்டையில் இருந்து இயக்கப்பட்டு வரும் எண் 4021 கடுகதி தொடருந்து வேவையை, கல்கிஸ்ஸை தொடருந்து நிலையத்திலிருந்து தொடங்கவும், காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டைக்கு இயக்கப்பட்டு வரும் எண் 4022 கடுகதி தொடருந்து சேவையை, கல்கிஸ்ஸை வரை நீட்டிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, கடந்த சில நாட்களாக கல்கிஸ்ஸை தொடருந்து நிலையத்திலிருந்து இந்த கடுகதி தொடருந்து சேவையை தொடங்க முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இன்று முதல், எண் 4021 கடுகதி தொடருந்து சேவை, கல்கிஸ்ஸை தொடருந்து நிலையத்திலிருந்து ஆரம்பிப்பதற்கும், எண் 4022 கடுகதி தொடருந்து சேவையை கல்கிஸ்ஸை தொடருந்து நிலையம் வரை இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

'கோட்டா கோ கம' கலவரத்தில்

## வாகனங்களைத் தாக்கிச் சேதப்படுத்திய 10 பேருக்கு ஒத்திவைத்த சிறைத் தண்டனை

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மொஹமட் அனஸ் உள்ளிட்ட பத்து பிரதிவாதிகளுக்கு தலா இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து அதனை 10–15 வருடங்களுக்கு ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன நேற்று தீர்ப்பளித்தார்.

2022 மே 9 காலி முகத்திடலில் நடந்த கோட்டா கோ காமா போராட்டத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமான கொழும்பு யூனியன் பிளேஸில் உள்ள சுற்றுலா ஹோட்டலுக்குள் பொல்லுகளுடன் நுழைந்து வளாகத்தையும், நிறுத்தப்பட்டிருந்த இரண்டு வாகனங்களையும் சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்களை பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒன்பது பிரதிவாதிகளுக்கு தலா 65,000 ரூபாய் அபராதம் விதித்த நீதிபதி, சம்பந்தப்பட்ட ஹோட்டலில் இருந்து மடிக்கணினியைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதிவாதிக்கு 80,000 ரூபாய் அபராதமும் விதித்தார்.

இந்த வழக்கின் அபராதம் எவ்வாறு செலுத்தப்பட்டது என்பதை ஆராய ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வழக்கை மீண்டும் அழைப்பதற்கும் நீதிபதி உத்தரவிட்டார்.



## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை தொடர்ந்து எழுந்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க, அப்படியென்றால் தனி வாக்கியத்தில் பதிலளிக்குமாறு நாங்கள் அமைச்சர்களுக்கு கோருகின்றோம். அமைச்சர் தாய் மொழியிலேயே பதிலளித்தார். அதில் ஏதும் சிக்கல் உள்ளனவா என்றும் தெரியவில்லை என்றார்.

மீண்டும் எழுந்த ஹெக்டர் ஹப்புஹாமி, மொழி தொடர்பான பிரச்சினையை கூறவில்லை என்று தெரிவித்து, தனது இடைக் கேள்விகளைக் கேட்டார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் சந்திரசேகரன் பதிலளிக்கையில், எனது தாய்மொழி தமிழே. கேள்வியொன்று கேட்கப்படும்போது பதிலை விளக்கமாக வழங்கவேண்டும். அதனை எனது தாய் மொழியிலேயே கூறினேன். ஆனால் எதிர்க்கட்சியினர் தமிழை பார்த்து எள்ளி நகையாடுபவர்களாகவும், தமிழை கொச்சைப்படுத்துபவர்களாகவும், தமிழுக்கு இழுக்கு ஏற்படுத்துபவர்களாகவும் மாறியுள்ளனர் என்று கூறி எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு தொடர்ந்தும் பதிலளித்தார்.

அமைச்சர் கூறிய கருத்துக்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு வெளியிட்டதால், அங்கு வாக்குவாதம் ஏற்பட்டது.

இவ்வேளையில் மீண்டும் எழுந்த ஹெக்டர் ஹப்புகாமி கூறுகையில்,

இங்கே இனவாதக்கருத்து கூறப்பட்டுள்ளது. இது எனது சிறப்புரிமைக்கு பாதிப்பாகும். நாங்கள் தமிழ்பேசுபவர்களுடனேயே இருக்கின்றோம். இங்கே தமிழ் மொழியில் அவர் பேசியது தொடர்பில் யாராவது எதாவது கூறினோமா? அவ்வாறு எதுவும் கூறவில்லை. தயவுசெய்து இதனைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்று கோருகின்றோம். நான் உரைபெயர்ப்பை கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றேன். இதனால் தமிழில் அவர் பேசியது தொடர்பில் எதுவும் கூறவில்லை என்றார்.

இதன்போது ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகையில்,

உங்களின் செயற்பாடுகளில் அதனையே வெளிப்படுத்தினீர்கள். உங்களின் உடல் செயற்பாடுகள் அதனைக் காட்டியது. இதனாலேயே அமைச்சர் அவ்வாறு கூறினார் என்றார்.

இதேவேளை எதிர்க்கட்சி பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க கூறுகையில், உடல் செயற்பாட்டை பார்த்துவிட்டு, இவ்வாறு தெரிவிப்பது நல்லதில்லை. இவ்வாறான கருத்தை வெளியிடுவது அநீதி. தயவுசெய்து அதனை திருத்திக்கொள்ளுங்கள். இல்லையென்றால் அவருக்கு அநீதியாகிவிடும் என்றார்.

இதனை தொடர்ந்து எழுந்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க, எங்களுக்கு தெரிந்ததையே கூறினோம். உங்களின் செயற்பாடுகளால் நாங்கள் புரிந்துகொண்டதையே கூறினோம் என்றார்.

இவ்வேளையில் மீண்டும் எழுந்த ஹெக்டர் ஹப்புகாமி கூறுகையில்,

சபாநாயகர் நீங்கள் சுயாதீனமானவர். நான் நேரத்தை சேமிக்கவே அமைச்சரிடம் குறித்த பதில்களை சபையில் முன்வைக்குமாறு கூறினேன். அதனை தவறான நோக்கத்தில் பார்க்கக்கூடாது. நாங்கள் தமிழ் மக்களுடனேயே இருக்கின்றோம். ஒருநாளும் நாங்கள் தமிழ் மொழிக்கு எதிராகச் செயற்படுவதில்லை. இதனை திருத்திக்கொள்ளுமாறு கோரிக்கை விடுகின்றோம் என்றார்.

இதனைத் தொடர்ந்து பதிலளித்த அமைச்சர் சந்திரசேகரன், நான் இந்த நாடாளுமன்றத்தில் பல வருடங்கள் இருந்துள்ளேன். ஒவ்வொருவரையும் பார்க்கும் போதும், அவர்களின் சிரிப்பு மற்றும் செயற்பாடுகளை பார்க்கும் போது அவர்கள் எதற்காக நக்கலடிக்கின்றனர் என்று தெரியாத பாப்பாக்கள் அல்ல நாங்கள். சிங்களத்தில் கூறியிருந்தாலும் இவ்வாறே பதில்களை வழங்கியிருப்பேன். நான் தமிழில் பதில்களை வழங்கினேன். தமிழில் கூறியதை பார்த்து கொச்சைப்படுத்தும் எதிர்க்கட்சி தொடர்பில் வெட்கப்படுகின்றேன் என்றார்.

தொடர்ந்தும் எழுந்த ஹெக்டர் ஹப்புகாமி, நாங்கள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. நீங்கள் இவ்வாறாக கூறவேண்டாம். இது இனவாத செயற்பாடாகும். இதனால் அந்த கருத்தை திருத்திக்கொள்ளுமாறு கோருகின்றேன் என்று மீண்டும் கூறி, தனது இரண்டாவது இடைக் கேள்விக்கான சந்தர்ப்பத்தை திலிப் வெத ஆராச்சிக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து சபாநாயகர், இதனை தொடர்ந்தும் விவாத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் என தெரிவித்து சபை நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார்.

## குற்றப்பத்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டது என்பதைப் போன்று எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது அமைச்சரவை அமைச்சர்களாக இருந்தவர்கள் பலர் இன்று எதிர்க்கட்சியில் உள்ளார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் இன்று (நேற்று) பல யோசனைகளை முன்வைக்கிறார். அன்று இந்த யோசனைகளை முன்வைத்திருந்தால் உண்மையைக் கண்டுப்பிடித்திருக்கலாம். இருப்பினும் முன்வைத்த இந்த யோசனைகள் தொடர்பில் நாங்கள் விசேட கவனம் செலுத்துவோம்.

குண்டுத்தாக்குதல்களை தொடர்பில் அப்போதைய எதிர்க்கட்சியின் அரசியல் செயற்பாட்டினால் இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டார்கள். 1983 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மக்கள் எவ்வாறு அச்சமடைந்திருந்தார்களோ அதேபோன்றுதான் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். முஸ்லிம் மக்கள் தமது மத அனுஸ்டானங்களில் ஈடுபடும்போது பல்வேறு நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டார்கள்.

எனக்கு நிறைய முஸ்லிம் நண்பர்கள் உள்ளார்கள். குண்டுத்தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களை போன்று இனவாத பிரச்சாரங்களினால் முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அக்காலப்பகுதியில் முஸ்லிம் மக்களை பாதுகாப்பதற்கு நாடளாவிய ரீதியிலான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டோம்.

குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற போது அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகள் இருந்தார்கள். இவர்கள் அமைச்சு பதவிகளை துறந்தார்களா, இல்லை, முஸ்லிம் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக இவர்கள் பேசவில்லை. ஆனால் நாங்கள் பேசினோம்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் அரசுத் தலைவர் ஆணைக்குழு, சிறப்பு குழு விசாரணை கோரப்படுகிறது. அனைத்தையும் நிறைவேற்றினால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா, இல்லை, அரசியல் தலையீட்டுடன் எந்த விசாரணைகளை மேற்கொண்டாலும் தீர்வு கிடைக்காது . எமது அரசாங்கத்தில் எவ்வித விசாரணைகளுக்கும் அரசியல் தலையீடுகள் இல்லை. ஆகவே சர்வதேச விசாரணைகள் அவசியமற்றது.

குற்றப்பத்திர அலுவலகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை குறிப்பிட்டுள்ளோம். சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் தான் நாங்கள் செயற்படுகிறோம். வெகுவிரைவில் குற்றப்பத்திர காரியாலயம் ஸ்தாபிக்கப்படும்.

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் முரண்பாட்டினால் குற்றப்பத்திர அலுவலகத்தை ஸ்தாபிக்க தீர்மானிக்கவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நாங்கள் இணக்கமாகவே செயற்படுகிறோம். ஒருசில ஊடகங்கள் சட்டமா அதிபரை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுகின்றன. பிள்ளையானுக்கு பிணை பெற்றுக்கொடுக்க சட்டமா அதிபர் முயற்சிக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக்கொள்வோம். இருப்பினும் நீதி விசாரணைகளுக்கு சர்வதேச நீதி கட்டமைப்பு அவசியமற்றது. தேசிய நீதிக்கட்டமைப்பு ஊடாகவே விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

குண்டுத்தாக்குதல் விவகாரத்தை அரசியல் கட்சிகளின் பேசுபொருளாக்குவற்கு நாங்கள் இனி இடமளிக்க போவதில்லை. குற்றவாளிகளுக்கும், பிரதான சூத்திரதாரிகளுக்கும் நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாக தண்டனை பெற்றுக்கொடுப்போம் என்றார்.

## ட்ரம்ப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றினாலன்றி, இந்த ஆளும்தரப்பால் எதையும் செய்ய முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகின் வட் வரி நிலைவரம் தொடர்பில் இப்போதும் அரசாங்கத்துக்கு எதுவும் தெரியாது. இவ்வாறு எவ்வித அறிவும் இன்றி திட்டமிடலொன்று இன்றி வரி அறவிடப்படுகிறது.

திட்டமிடலொன்று இன்றி வரி அறவிடப்படும் போது பொருட்களின் விலைகள் மற்றும் சேவைக் கட்டணங்களும் சடுதியாக அதிகரிக்கும்.

வரி விவகாரத்தில் மாத்திரமின்றி எந்தவொரு விடயத்திலும் ஆளும்தரப்பு திட்டமிடல் இன்றியே தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஜனாதிபதியால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கான பதில் கடிதம் கிடைக்கும் வரை காத்திருக்கின்றோம்.

ஜனாதிபதி செயலகம் தபாலகத்துக்கு அருகில் காத்திருப்பதாகவே தகவல்கள் கிடைத்துள்ளன. ட்ரம்ப் இலங்கை மீது அனுதாபப்பட்டு தீர்மானத்தை மாற்றினாலன்றி, இந்த ஆளும்தரப்பால் எதையும் செய்ய முடியாது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். அன்று நாம் அடைந்த துயரத்தை விட இன்று அவரை பதவி விலகச் செய்தவர்கள் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் அனைத்து மக்களையும் அந்த துயரத்திலிருந்து மீட்பதற்கான பொறுப்பு எமக்கிருக்கிறது. விரைவில் நாம் அதற்குரிய செயற்பாடுகளி;ல் ஈடுபடுவோம் என்றார்.

## சிறுமியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் கட்ட அகழ்வு 9 நாட்களில் நிறைவடைந்தது.

முதலாம் கட்டம் இரண்டாம் கட்டம் என இந்த அகழ்வுப் பணிகள் மொத்தமாக 23 நாட்கள் இட்பெற்றுள்ளது. இவற்றில் இதுவரை 63 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்படுள்ளன. அவற்றில் 54 மனித எலும்புகூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த அகழ்வின் போது, இன்று நேற்று சிறுமியின், ஆடைகள், இறப்பர்செருப்பு மற்றும் பிற பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## பகிடிவதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது இடங்களைக் கண்காணிக்க நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் வழிகள், உணவக விடுதிகள், விளையாட்டு அரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் தாழ்வாரங்களில் சிசிடிவி கெமராக்களை நிறுவவும் முன்மொழியப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுக்கத் தயாரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை கண்டிப்பாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் இன்று (09) பிறப்பித்த உத்தரவின்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்த முன்மொழிவுகளை செய்துள்ளது.

இந்த வழிகாட்டுதல்களை செயல்படுத்த தேவையான நிதி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வசதிகளை வழங்குமாறு கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருக்கு அமர்வு உத்தரவிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் தொற்றால் உடல் மற்றும் மூளைகாயங்களுக்கு உள்ளான முதலாம் ஆண்டு மாணவன் பசிந்து ஹிருஷான் டி சில்வா தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஷிரான் குணரத்ன, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சோபித ராஜகருணா ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வு, இந்த உத்தரவுகளை பிறப்பித்தது.

இந்த உத்தரவுகளை அமல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விசாரிக்க வழக்கை ஜனவரி 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# முன்னாள் அமைச்சர் டக்ளஸ் அரசுத் தலைவருக்குக் கடிதம்

## செம்மணி உண்மைகளை வெளிபடுத்தக் கோரிக்கை

செம்மணியில் முன்னெடுக்கப்படும் அகழ்வுகளில் மனித எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வரும் நிலையில், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் அரசுத் தலைவர் அநுரகுமார திஸ்ஸாநாயக்கவிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவித்தார்.

எக்காரணம் கொண்டும் புதைகுழி அகழ்வுகள் நிறுத்தப்படாமல் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும், எரிபொருள்விலைஅதிகரிப்பைஎதிர்கொள்ளும் வகையில் கடற்றொழிலாளர்களுக்கு விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் குறித்த கடிதத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'கிளீன் ஸ்ரீலங்கா' ஆட்சியில் ஈ.பி.டி.பி. தூய்மையான கட்சி என்பது நிரூபணமாகும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும், 'செம்மணி பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற அகழ்வுப் பணிகளில் தொடர்ச்சியாக மனித எச்சங்கள் அகழப்பட்டு வருகின்றன.

எமது பிரதேசத்தில் யுத்தம் நிலவிய காலத்த பல்வேறு மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது. இதில் பல்வேறு தரப்புக்கள் சம்மந்தப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களும் இருக்கின்றன.

இவை தொடர்பாக கடந்த காலங்களில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் யார் என்பது வெளிக் கொண்டு வரப்படாத நிலையில், செம்மணியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின் அகழ்வுப் பணிகளும், அங்கு மீட்கப்படுகின்ற மனித எச்சங்களும், புதைகுழி விவகாரத்தினை மீண்டும் பேசு பொருளாக மாற்றி இருக்கின்றது

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில் எமது மக்களிடையே நிலவுகின்ற குழப்ப நிலையை மேலும் தூண்டிவிடுவதாக சில சுயலாப அரசியல் சக்திகளின் கருத்துகளும், செயற்பாடுகளும் அமைந்து வருகின்றன.

எனவே, மேற்படி விடயம் தொடர்பில் ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை தொடர்ச்சியான முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இந்த ஆளும்தரப்பு முன்னெடுக்க வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

செம்மணி மாத்திரமல்ல, மன்னார், கொக்குளாய், துணுக்காய், மண்டை தீவு என்று எங்கெல்லாம், மனித புதைகுழிகள் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம், அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மனித எச்சங்கள் மீட்கப்படுமாயின் அவை எந்தக் காலப் பகுதியில் புதைக்கப்பட்டவை என்பது கண்டறியப்பட்டு சம்ந்தப்பட்டவர்கள் யார் என்பதும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

சிறீதர் தியேட்டரில்கூட மனித புதைகுழிகள் இருப்பதாக சமூக ஊடகங்களில் சில செய்திகளை காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறு புதைகுழி விவகாரத்துடன் ஈ.பி.டி.பி. தொடர்புபடுத்த விரும்புகின்றவர்களுக்கு ஒரு சவால் விடுகின்றோம்.

அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், மண்டைதீவிலே புதைகுழிகள் இருப்பதாகவும் அதுதொடர்பாக எமது செயலாளர் நாயகத்திற்கு தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்த கருத்திற்கு பதில் அளித்த, நீதி அமைச்சர், வெறுமனே செவி வழிச் செய்திகளை வைத்து கதை சொல்லுவதை விடுத்து, ஆதாரங்கள் இருந்தால் வெளியிடுங்கள் விசாரிக்கிறோம் என்று சொல்லி இருக்கின்றார்.

எனவே சிறீதர் தியேட்டரில் புதைகுழி இருக்கின்றது ஈ.பி.டி.பி. மக்களை கொலை செய்து புதைத்தது சமூக ஊடகங்களில் கருத்துக்களை பரவ விடுகின்றவர்கள் உரிய முறையிலே முறைப்பாடுகளை பதிவு செய்யலாம். அதனை ஈ.பி.டி.பி. ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

கிளீன் ஸ்ரீலங்கா என்ற மகுட வாக்கியத்துடன் முன்னெடுக்கப்படுகின்ற இந்த ஆட்சிக் காலத்தில் ஈ.பி.டி.பி. கிளீனான அரசியல் கட்சி என்ற வெளிப்படுத்தப்படும், எம்மீது அரசியல் நோக்கங்களுக்காக பூசப்பட்டு வருகின்ற அனைத்து சேறுகளும் கழுவப்படும் என்று நம்புகின்றோம்.

அந்த அடிப்படையில் அரசுத் தலைவர் அநுரகுமார திஸ்ஸாநாயக்கவிற்கு எமது செயலாளர் நாயகத்தினால் இரண்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒரு கடித்ததில் ஏற்கனவே கூறியது போன்று, புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சி முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதுடன்,

இன்னு மொரு கடிதத்தில், கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில், எரிபொருள் விலையேற்றத்தினால் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்ட தொழிர்சார் பாதிப்புக்களை குறைக்கும் நோக்கில் கடற்றொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்ற மண்ணெண்னை டீசல் போன்றவற்றுக்கு லீற்றர் ஒன்றிற்கு 25 ரூபாய் வழங்கப்பட்டிருந்தது.

அந்த திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் எரிபொருட்களின் விலை அதிகரித்திருப்பதால், அவ்வாறான ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தி கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த விடயங்கள் தொடர்பாக அரசுத் தலைவர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பார் என்று நம்புகின்றோம் என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2025இல் வெளியிடப்பெற்றது